HMOP. 36/2021

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 26.04.2024

ம.சா.1– மாரியப்பன் த/பெ – ஜெயபாண்டி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு வழக்கு விபரங்கள் தெரியும். எங்களுக்கு ராஜா ஆதேவ் என்ற ஆண் குழந்தை 2012 ல் பிறந்தது. இதற்கு முன்பு எதிர்மனுதாரர் கருவுற்று இருந்து இரண்டு தலை, இரண்டு முதுகெலும்புடன் சிசு இருந்ததால் 5 மாதத்தில் கரு கலைக்கப்பட்டது. திருமணம் முடிந்த பின்னர் நல்ல முறையில் 6 மாதம் சேர்ந்து வாழ்ந்தோம். இதற்கு முன்பு சிவகாசி, சார்பு நீதிமன்றத்தில் நான் 2013 ம் ஆண்டு விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அந்த வழக்கை நான் சேர்ந்து வாழ்வதாக சொன்னதால் திரும்ப பெற்றுக்கொண்டேன். நான் மேற்படி வழக்கை வாபஸ் பெற்ற பின்பு எதிர்மனுதாரருடன் 1.1/2 வருடம் சேர்ந்து வாழ்ந்தேன். எதிர்மனுதாரர் என்னிடம் இருந்து 2013 ம் ஆண்டு பிரிந்து சென்றார். எதிர்மனுதாரர் அவர் வீட்டிற்கு சென்றபின்பு நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர் மீது நான் 2015 ம் ஆண்டு, எதிர்மனுதாரரை எனது மாமனார், மாமியார் கடத்தி சென்றதாக விருதுநகர், அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதற்கு எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. எனது தாயார் 05.12.2020 ல் இறந்தார். எனது தாயாரின் இறுதிசடங்கில் எதிர்மனுதாரரும்,

குழந்தையையும் கலந்து கொண்டார்கள் என்றால் வீட்டிற்கு வெளியே 5 நிமிடம் இருந்து விட்டு, எந்த சடங்கும் செய்யாமலும் சென்று விட்டார்கள். எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழக்கோரி இந்நீதிமன்றத்தில் HMOP.74/2023 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் எனது தம்பியின் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எனது மாத சம்பளம் ரூ.15,000/-. அந்த நிறுவனத்தின் பெயர் ஜெயராஜன் பைன் ஆர்ட்ஸ். எனக்கு சொந்தமாக நிறுவனம் எதுவுமில்லை. I.A.No.1/2023 ல் நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மாரியப்பன் பிரிண்டிங் பிரஸ் என்ற பெயரில் தொழில் நடத்தி வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தை எனது தம்பி தான் நடத்தி வருகிறார். எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக தான் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ 2 ஆண்டுகளாக முயற்சி செய்தேன். குழந்தை ராஜா ஆதேவ் பிறந்து 1.1/2 ஆண்டுகள் நாங்கள் ஒரே வீட்டில் தனி தனி அறையில் இருந்தோம். மாரியப்பன் பிரிண்டிங் பிரஸ் என்ற நிறுவனம் எனக்கு சொந்தமானது என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.